வ.மா.பொ.சே.ஆ.குழு சுற்றறிக்கை இல : 07/2022

எனது இல.NP/07/10/02/190
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்,
யாழ்ப்பாணம்.
15.03.2022.

அமைச்சின் செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாகம்,
திணைக்களத் தலைவர்கள்,
வடக்கு மாகாணம்.

**வடக்கு மாகாண பொதுச் சேவையின் தொழில்நுட்பவியல் சேவையின் தரம் III மற்றும் தரம் IIஇல் உள்ள அலுவலர்களுக்கான 1வது, 2வது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை – 2018 (II) 2022**

வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் 12.01.2016ஆந் திகதி அனுமதிக்கப்பட்டதும் 01.06.2013ஆந் திகதியிலிருந்து செயல்வலுவிலுள்ளதுமான வடக்கு மாகாண பொதுச் சேவையின் தொழில்நுட்பவியல் சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பின் பந்தி 08 மற்றும் இணைப்பு 01, 02 ற்கு அமைவாக தரம் III மற்றும் தரம் IIஇலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையானது செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு அவர்களால் **2022ஆம் ஆண்டு** நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2.0 தகைமைகள் :

- ஓர் அலுவலர் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை **இரண்டிற்கும் (இரு தரங்களிற்கும்) ஒரே தடவையில் தோற்றமுடியாது.**
- மேற்படி பதவியில் தரம் IIIஇல் உள்ள அலுவலர்கள் 1வது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கு மாத்திரமும் தரம் IIஇல் உள்ள அலுவலர்கள் 2வது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கு மாத்திரமும் விண்ணப்பிப்பதற்குத் தகைமை பெறுவர்.
- குறித்த பதவிகளில் இதுவரை இப்பரீட்சையினைப் பூரணப்படுத்தியிராத அலுவலர்களும் விண்ணப்பிப்பதற்குத் தகைமை பெறுவர்.

03. இப்பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் மாதிரி விண்ணப்பப் படிவமானது இவ்வறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அம்மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களை தயாரித்துக் கொள்ளல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை பரீட்சார்த்திகள் தமது திணைக்களத் தலைவர் ஊடாக **08.04.2022ஆந்** திகதி அல்லது அதற்குமுன் கிடைக்கக்கூடியவாறு **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல : 393/48, கோவில் வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம்."** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னராக கிடைக்கின்ற விண்ணப்பங்களும் உரிய தகவல்களைப் பூர்த்திசெய்யாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

04. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம் :-** பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் யாதேனும் ஒன்றைப் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள தேசிய ஆளடையாள அட்டை
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (Passport)
(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம் (Driving License)

மேற்குறிப்பிடப்பட்ட ஏதேனுமொரு ஆவணமொன்றை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்த உரிமை இரத்துச் செய்யும் அதிகாரம் மேற்பார்வையாளருக்கு உண்டு.

05. **விண்ணப்பங்கள் :-**

05.1. விண்ணப்பத்தின் இல. 1 முதல் 6 வரையிலான பந்திகள் முதலாம் பக்கத்திலும் இல. 7 முதல் 10 வரையிலான பந்திகள் இரண்டாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் A4 அளவினதான தாளில் கணினியில் தயார் செய்யப்பட்டு பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்து மூலம் சரியாகவும், தெளிவாகவும் பூரணப்படுத்தப்படுத்தல் வேண்டும்.

05.2. விண்ணப்பப்படிவமானது இத்துடன் உள்ள மாதிரிப் படிவத்திற்கமைவாக தயார் செய்து விண்ணப்பித்தல் வேண்டுமென்பதுடன் விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி மற்றும் முற்பிரதி என்பன அனுப்பிவைத்தலாகாது என அறிவுறுத்தப்படுகிறது.

05.3. மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்புடையதாகாத மற்றும் முழுமை பெறாத தகவல்களைக் கொண்டுள்ள விண்ணப்பங்கள் அறிவிப்பேதுமின்றி நிராகரிக்கப்படும்.

05.4. தரப்பட்டுள்ள பரீட்சை அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக விண்ணப்பம் இருப்பது தொடர்பில் பரீட்சார்த்தியே கூடிய கவனம் எடுத்தல் வேண்டும் என்பதுடன் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

06. **பரீட்சைக் கட்டணம் :-**

6.1 முதன்முறையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சைக்கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை.

6.2 ஏனைய பரீட்சார்த்திகள் ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் ரூபா 250.00ஐயும் ஒன்றிற்கு மேற்பட்ட பாடங்களிற்குத் தோற்றுவதாயின் ரூபா 500.00ஐயும் வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள எந்தவொரு அஞ்சல் அலுவலகமொன்றிலும் செலுத்தி, காசுக்கட்டளையினை "**செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்**" என்ற பெயருக்கு **யாழ்ப்பாணத் தபால் அலுவலகத்தில்** மாற்றக்கூடியவாறு பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

6.3 விண்ணப்பதாரி காசுக்கட்டளையின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதுடன் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்ற முடியாது.

07. விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்கு, வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரினால் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பப்படும். பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்குதலானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளார் என்பதற்கான சான்று அல்ல என்பதைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு தங்களின் கையொப்பங்கள் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அனுமதி அட்டைகள் இல்லாமல் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. எவரேனும் பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைத் திகதிக்கு குறைந்தபட்சம் 3 நாட்களுக்கு முன்னரேனும் பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் பின்வரும் விபரங்களுடன் வட மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அறிவிக்க வேண்டும்.

- கோரிக்கைக் கடிதம்,
- விண்ணப்பப் படிவத்தின் பிரதி,
- பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் உறுதிப்படுத்திய பிரதி (செலுத்தியிருப்பின் மாத்திரம்)
- விண்ணப்பம் அஞ்சலிடப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம், திகதி.
- அனுமதி அட்டை அனுப்பிவைக்க வேண்டிய தொலைநகல் இலக்கம் (Fax No),

08. இப்பரீட்சைக்குத் தோற்றுகின்ற அலுவலர்களுக்கு, பரீட்சைக்குத் தோற்றக்கூடியவாறு திணைக்களத் தலைவர்களால் தாபனவிதிக்கோவையின் அத்தியாயம் XIIன் பிரிவு 19ற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

09. உத்தியோத்தர்கள் பரீட்சையில் சித்தியெய்துவதற்காக தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய மொத்தப் புள்ளிகளில் குறைந்த பட்சம் நூற்றுக்கு நாற்பது (40%) வீதம் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

10. பரீட்சைக்கு தோற்றிய சகல பரீட்சார்த்திகளினது பெறுபேறுகளும் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் அனுப்பி வைக்கப்படும்.

11. *பாடத்திட்டம்.*

1வது 2வது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்குரிய பாடத்திட்டங்கள் இணைப்பு I, IIஇல் காட்டப்பட்டுள்ளன.

12. இச்சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களினைத் தங்கள் அமைச்சின்/ திணைக்களங்களின்/ அலுவலகத்தின் கீழ்க் கடமையாற்றும் தொடர்புடைய அலுவலர்களுக்குத் தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மேலும் இத்தகவல்களை வடமாகாண இணையத்தளமான www.np.gov.lk எனும் முகவரியில் Exams & Recruitments ———► Advertisement ஊடாக பெற்றுக்கொள்ள முடியும்.

**கவனிக்கவும் :-** இச்சுற்றறிக்கையின் மொழி மூலங்களில் ஏதாவது வேறுபாடு காணப்படின் தமிழ் மொழியே மேலோங்குதல் வேண்டுமென்பதுடன் இப்பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரின் தீர்மானம் இறுதியானதாகும்.

**சி.திருவாகரன்,**
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வட மாகாணம்.
*15.03.2022.*

சி.திருவாகரன்
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடமாகாணம்

பிரதிகள் :- 1. பிரதம செயலாளர், பிரதம செயலாளர் அலுவலகம், வடமாகாணம்.
2. பிரதிப் பிரதம செயலாளர் - பொறியியல் சேவைகள், பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம், வடமாகாணம்.

## பாடத்திட்டங்கள்

இணைப்பு I

1வது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை (தரம் III)

| | | | |
|---|---|---|---|
| 1. தாபன விதிக் கோவை மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள். | பாட இல (01) | நேரம் - 02 மணித்தியாலம் | 100 புள்ளிகள் |
| 2. நிதி ஒழுங்குவிதிகள் | பாட இல (02) | நேரம் - 02 மணித்தியாலம் | 100 புள்ளிகள் |

1. **தாபன விதிக் கோவை மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள்.**

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் மற்றும் தாபன விதிக்கோவை பின்வரும் அத்தியாயங்களின் அடிப்படையிலானதாக இருக்கும்.

**அத்தியாயம் VIII**

**அத்தியாயம் XII**

**அத்தியாயம் XIII**

**அத்தியாயம் XIV**

**அத்தியாயம் XIX**

2. **நிதி ஒழுங்குவிதிகள்**

நிதி ஒழுங்கு விதிகள் பின்வரும் அத்தியாயங்களின் அடிப்படையிலானதாக இருக்கும்.

- **அத்தியாயம் I**

  நிதி ஒழுங்கு விதிகள்– 1 முதல் 68 வரை
- **அத்தியாயம் III**

  நிதி ஒழுங்கு விதிகள் – 124 தொடக்கம் 147 வரை

## Syllabus

,Annexure I

**1st Efficiency Bar Examination for Grade III**

| | | | |
|---|---|---|---|
| **1. Establishment Code and Procedural Rules of Public Service Commission** | Subject No. (01) | Time - 02 Hours | 100 Marks |
| **2. Financial Regulation** | Subject No. (02) | Time - 02 Hours | 100 Marks |

1. **Establishment Code and Procedural Rules of Public Service Commission :**

Procedural Rules of Public Service Commission

Chapter : VIII, XII, XIII, XIV, XIX of Establishment Code

2. **Financial Regulations ;**

- **Chapter I**

  From 01 to 68 of Financial Regulations
- **Chapter III**

  From 124 to 147 of Financial Regulations

இணைப்பு II

2வது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை (தரம் II)

| | | | |
|---|---|---|---|
| 1. தாபன விதிக் கோவை | பாட இல (03) | நேரம் - 02 மணித்தியாலம் | 100 புள்ளிகள் |
| 2. நிதி ஒழுங்குவிதிகள் | பாட இல (04) | நேரம் - 02 மணித்தியாலம் | 100 புள்ளிகள் |

**1.** தாபன விதிக் கோவை

தாபனவிதிக் கோவை பின்வரும் அத்தியாயங்களின் அடிப்படையிலானதாக இருக்கும்.

அத்தியாயம் **XV**
அத்தியாயம் **XVI**
அத்தியாயம் **XXIII**
அத்தியாயம் **XXIV**
அத்தியாயம் **XXV**
அத்தியாயம் **XXVII**
அத்தியாயம் **XXVIII**
அத்தியாயம் **XXX**
அத்தியாயம் **XXXIII**
அத்தியாயம் **XLVII**
அத்தியாயம் **XLVIII**

**2.** நிதி ஒழுங்குவிதிகள்

நிதி ஒழுங்கு விதிகள் பின்வரும் அத்தியாயங்களின் அடிப்படையிலானதாக இருக்கும்.

- அத்தியாயம் **VI**
  நிதி ஒழுங்கு விதிகள் 315 தொடக்கம் 396 வரை

- அத்தியாயம் **XIII**
  நிதி ஒழுங்கு விதிகள் 685 தொடக்கம் 775 வரை

**Annexure II**

**2nd Efficiency Bar Examination for Grade II**

| | | | |
|---|---|---|---|
| **1. Establishhment Code** | Subject No. (03) | Time : 02 Hours | 100 marks |
| **2. Financial Regulations** | Subject No. (04) | Time : 02 Hours | 100 Marks |

**1. Establishment Code**

Chapter : **XV, XVI, XXIII, XXIV, XXV, XXVII, XXVIII, XXX, XXXIII, XLVII, XLVIII of Establioshment Code**

**2. Financial Regulations**

- **Chapter VI**
  From 315 to 396 of FinancialRegulations

- **Chapter XIII**
  From 685 to 775 of Financial Regulations